உங்கள் அபிமான தினதமிழ் செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள வாட்ஸாப்பில் பின்தொடரவும்...

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்

DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

வாசிப்பை சுவாசிப்போம்! கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள் வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 02.08.2026 • மலர் 04 • இதழ்: 214 • ஞாயிறு • Edition : Nagercoil • 02.08.2026 • Vol : 04 • Issue : 214 • Page : 4 • Rs. 5/-

# காவலர்களுக்கு பதக்கம், முதல்வர் வழங்கினார்

## குடும்பத்தினர் பெருமிதத்துடன் கொண்டாட்டம்





' சென்னை:

'ழக காவல்துறையில் சிறப்பாக பணியாற்றிய அதிகாரிகள், போலீஸாருக்கு குடியரசுத் தலைவர், மத்திய உள்துறை அமைச்சர் மற்றும் தமிழக முதல்வர் பதக்கங்கள் வழங்கும் விழா, சென்னை எழும்பூரில் உள்ள ராஜரத்தினம் மைதானத்தில் நேற்று மாலை நடைபெற்றது. இந்த விழாவில் முதல்வர் விஜய் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பதக்கங்களை வழங்கினார்.

இந்த நிகழ்வில், மெய் சிலிர்க்க வைக்கும் வகையில் இருசக்கர வாகன சாகச நிகழ்ச்சி நடைபெற்றது. இதற்கு போலீஸ் இன்ஸ்பெக்டர் அன்பரசி தலைமை தாங்கி பாராட்டுகளை பெற்றார். ஆண் காவலர்களும் பல்வேறு வகையான சாகசங்களில் ஈடுபட்டு கைதட்டுகளை குவித்தனர்.

50க்கும் மேற்பட்ட போலீஸார் துப்பாக்கிகளை கையில் சுழற்றியபடி இங்கும், அங்குமாக சென்று பார்வையாளர்களின் பாராட்டுகளை பெற்றனர். ஒவ்வொரு நிகழ்வுகளின் போதும் பின்னணியில் முதல்வர் நடித்த விஜய் திரைப் படங்களின் பாடல்கள் ஒலித்தன.

நிகழ்ச்சி முடிந்து முதல்வர் புறப்பட்டு சென்ற உடன் பதக்கம் பெற்றவர்கள் தாங்கள் பெற்ற பதக்கங்களுடன் குடும்பத்தினர் மற்றும் நண்பர்களுடன் போட்டோ, செல்பி, வீடியோ எடுத்து மகிழ்ந்தனர். முன்னதாக நிகழ்ச்சி நடைபெற்ற ராஜரத்தினம் அரங்கத்தில் ஆயிரக்கணக்கானோர் திரண்டிருந்தனர்.

நிகழ்ச்சியை ஆங்காங்கே காணும் வகையில் டிஜிட்டல் திரை அமைக்கப்பட்டிருந்தது. அதில், முதல்வர் முகம் காண்பிக்கும் போதெல்லாம் அனைவரும் உற்சாக கோஷமிட்டனர்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை ஆயுதப் படை கூடுதல் டிஜிபி தினகரன் சிறப்பாக செய்திருந்தார்.

பதக்கம் பெற்றவர்கள் ஏமாற்றம்

பதக்கம் பெறுபவர்கள் அனைவருக்கும் முதல்வர் விஜய் அவரது கைகளாலேயே பதக்கங்களை வழங்குவார் என ஆவலுடன் எதிர்பார்த்தனர். இந்த காட்சிகளை காணவும், மகிழ்ச்சியை பகிர்ந்து கொள்வதற்கும் தங்களது குடும்பத்தினர் மற்றும் உறவினர்களை அழைத்து வந்தனர். ஆனால், 72 பேருக்கு மட்டுமே முதல்வர் பதக்கம் கொடுத்தார். முதல்வர் கையால் பதக்கம் பெற முடியாத வருத்தம், ஏமாற்றம் ஒரு பக்கம் இருந்தாலும், விழாவில் முதல்வரைப் பார்த்த மகிழ்ச்சியை போலீஸார் மற்றும் அவர்களது குடும்பத்தினரிடம் காண முடிந்தது.

# தென் மாவட்டங்களில் கைத்தறித் தொழில் மேம்படுத்தப்படும்

## கைத்தறி, கதர்த்துறை அமைச்சர் விஜய் பாலாஜி தகவல்



நாகர்கோவில், ஆக.1

கன்னியாகுமரி மாவட்ட கைத்தறி துறையின் சார்பில் ஆரல்வாய்மொழியில் செயல்பட்டு வரும் கூட்டுறவு நூற்பாலை மற்றும் வடசேரி பகுதியில் அமைந்துள்ள நெசவாளர் கூட்டுறவு சங்கம் ஆகியவற்றை அமைச்சர் விஜய் பாலாஜி ஆய்வு மேற்கொண்டார். நிகழ்ச்சிக்கு கைத்திறன், கைத்தறி துணிநூல் மற்றும் கதர்த்துறை அரசு முதன்மைச் செயலாளர் வெங்கடேஷ் தலைமை வகித்தார். மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப் முன்னிலை வகித்தார். அமைச்சர் எம். விஜய் பாலாஜி ஆய்வு மேற்கொண்டு கூறியதாவது: ஆரல்வாய்மொழி நூற்பாலை 1965ம் ஆண்டு நிறுவப்பட்டு, தற்போது 62 நிரந்தர தொழிலாளர்கள் உட்பட மொத்தம் 244 தொழிலாளர்கள் பணியாற்றி வருகின்றனர்.

நூற்பாலையின் அன்றாட உற்பத்தித் திறன், நூல் தரம் மற்றும் இயந்திரங்களின் செயல்பாடுகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அங்கு பணிபுரியும் தொழிலாளர்களைச் சந்தித்து, அவர்களின் குறைகள் மற்றும் கோரிக்கைகளைக் கேட்டறியப்பட்டது. தற்காலிகப் பணியாளர்களை நிரந்தரம் செய்ய வேண்டும் என்ற தொழிலாளர்களின் கோரிக்கையினை தமிழ்நாடு முதலமைச்சர் கவனத்திற்கு கொண்டு சென்று உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். தற்போது ஆலையின் உற்பத்தித் தரத்தை உயர்த்தி, இலாபகரமாக இயக்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இங்கு பணிபுரியும் 60க்கும் மேற்பட்ட தொழிலாளர்களின் வேலைவாய்ப்பை உறுதிப்படுத்த தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

தொடர்ந்து வடசேரி பெரியராசிங்கன் தெரு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. தற்பொழுது 382 இயங்கும் தறிகளுடன் செயல்பட்டு வருகிறது. கடந்த 20252026 ஆம் நிதியாண்டில் ரூ.260.88 இலட்சம் மதிப்பிலான ஜவுளிகள் உற்பத்தி செய்யப்பட்டு ரூ.304.55 இலட்சம் மதிப்பிலான ஜவுளிகள் விற்பனை செய்யப்பட்டு சங்கம் தொடர் இலாபத்துடன் இயங்கி வருகிறது.

தென் மாவட்டங்களில் கைத்தறி தொழிலை மேலும் விரிவுபடுத்த வேண்டும் என்பதே அரசின் நோக்கமாகும். மேலும் கைத்தறி பூங்கா அமைக்க அரசு உரிய நடவடிக்கை எடுக்கப்படும். என கூறினார். நடைபெற்ற ஆய்வில் கன்னியாகுமரி கூட்டுறவு சங்க நூற்பாலை மேலாண்மை இயக்குநர் முருகையா, கைத்தறி உதவி இயக்குநர் ஜெயசுதா, வடசேரி கூட்டுறவு சங்க மேலாண்மை இயக்குநர் பிரிட்மேன், துணை இயக்குநர் அருணாச்சலம், பணியாளர்கள், துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.

# தூத்துக்குடி மழைநீர் வடிகால் பணிகளை அமைச்சர் ஸ்ரீநாத் ஆய்வு



தூத்துக்குடி , ஆக. 2

தூத்துக்குடி மாவட்டம் புதுக்கோட்டை மேம்பாலம் வழியாக உப்பாற்று ஓடைக்குச் செல்லும் மழைநீர் வடிகால் பணிகளை மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை அமைச்சர் ஆ. ஸ்ரீநாத், மாவட்ட ஆட்சியர் விஷு மகாஜன் தலைமையில் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தூத்துக்குடி மாவட்டத்தில் மழைக்காலங்களில் பெய்யும் கனமழை மற்றும் வெள்ளப் பாதிப்புகளைத் தடுப்பதில் புதுக்கோட்டை உப்பாற்று மழைநீர் வடிகால் ஓடை முக்கியப் பங்கு வகிக்கிறது.

இந்த ஓடை வழியாக மழைநீர் சீராகக் கடலுக்குச் செல்வதன் மூலம் மாநகரப் பகுதிகளில் வெள்ளப்பெருக்குக் குறைகிறது. கடந்த 2023ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் பெய்த வரலாறு காணாத கனமழையால் தூத்துக்குடி மாநகரம் கடுமையாகப் பாதிக்கப்பட்ட நிலையில், அது போன்ற பாதிப்புகள் மீண்டும் ஏற்படாமல் தடுக்கவும், நீர் தடையின்றிச் செல்வதை உறுதி செய்யவும் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

ஆய்வின் போது, உப்பாற்று ஓடையின் முகப்புப் பகுதியில் சுமார் 80 சதவீதம் வரை ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருப்பது கண்டறியப்பட்டது.

இதையடுத்து, சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்திய அமைச்சர், ஆக்கிரமிப்புகளை உடனடியாக அகற்ற நடவடிக்கை எடுக்குமாறு உத்தரவிட்டார்.

ஆய்வுக்குப் பின் அமைச்சர் ஸ்ரீநாத் தெரிவித்ததாவது: "தூத்துக்குடி மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளில் உள்ள அனைத்து நீர்நிலைகளிலும் அதிகாரிகள் நேரில் சென்று ஆய்வு மேற்கொள்வார்கள். அப்போது கண்டறியப்படும் அனைத்து ஆக்கிரமிப்புகளும் சட்டப்படி அகற்றப்படும். நீர்வழித்தடங்களைப் பாதுகாக்க அரசு கடுமையான நடவடிக்கை எடுக்கும்" எனத் தெரிவித்தார். ஆய்வின் போது, கீழ்தாமிரபரணி மற்றும் கோரம்பள்ளம் ஆறு வடிநிலக் கோட்ட நீர்வளத்துறை அதிகாரி தங்கராஜன், தூத்துக்குடி வட்டாட்சியர் திருமணிஸ்டாலின் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

தின தமிழ் நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள் !



தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது நடைபெற்ற அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் கலந்து கொண்ட சுற்றுச்சூழல்,காலநிலை மாற்றத் துறை அமைச்சர் மற்றும் தென்காசி மாவட்ட பொறுப்பு அமைச்சர் மரு.ராஜீவ் , தென்காசி மாவட்ட ஆட்சியர் ரஞ்ஜீத்சிங் ஆகியோர் பல்வேறு துறைகளின் சார்பில் 241 பயனாளிகளுக்கு ரூபாய் 237.69 இலட்சம் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். நிகழ்ச்சியில் தவெக மாவட்ட செயலாளர்கள், முக்கிய நிர்வாகிகள், அரசு அதிகாரிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# நாகர்கோவிலில் போலீசாரை அறிவாளால் வெட்ட முயன்ற ரவுடி கைது

## 18 வழக்குகளில் தொடர்புடையவர்

நாகர்கோவில், ஆக. 2

நாகர்கோவில் கோட்டாறு காவல் நிலைய எல்லைக்குட்பட்ட வட்டவிளை பிள்ளையார் கோவில் பகுதியில் நேற்று முன்தினம் காலை போலீசார் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அங்கு நின்று கொண்டிருந்த கோட்டாறு கலைநகரை சேர்ந்த சுதன் என்ற நண்டு சுதன் (34) பொது மக்களுக்கு இடையூறாக சாலையில் மறித்து நின்று கொண்டு, ஆபாசமான வார்த்தைகளால் பேசிக் கொண்டிருந்தார்.

அப்போது அங்கு பாதுகாப்பு பணியில் இருந்த காவலர் ஷேக் முகமது என்பவர் சுதனிடம் ஏன் இப்படி பேசுகிறீர்கள்? என்று தட்டி கேட்டுள்ளார். இதில் ஆத்திரம் அடைந்த சுதன் தான் மறைத்து வைத்திருந்த அறிவாளை எடுத்து எடுத்து காவலரின் கழுத்தை நோக்கி வெட்ட முயன்றுள்ளார். காவலர் சுதாரித்து கீழே குனிந்ததால் வெட்டு விழாமல் தப்பினார். மேலும் பொது மக்களுக்கு அச்சத்தை ஏற்படுத்தினார்.

இந்த சம்பவம் குறித்து கோட்டாறு காவல் நிலையத்தில் போலீசார் புகார் அளித்தனர். போலீசார் வழக்கு பதிவு செய்து இன்ஸ்பெக்டர் கண்ணன் தலைமையிலான போலீசார் சுதனை கைது செய்தனர். பின்னர் தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருகிறது. சுதன் வீட்டில் போலீசார் சோதனை நடத்தினர்

தொடர்விசாரணையில் கைது செய்யப்பட்டுள்ள நண்டு சுதன் ஒரு கொடூரமான குற்றப் பின்னணி கொண்டவர் என தெரிய வந்தது. காவல்துறை ஆவணங்களின்படி இவர் ஏ பிரிவு ரவுடியாக வகைப்படுத்தப்பட்டுள்ளார். இவர் மீது கோட்டாறு, சுசீந்திரம், ராஜாக்கமங்கலம், வடசேரி மற்றும் தூத்துக்குடி மாவட்ட காவல் நிலையங்களில் கொலை, கொலை முயற்சி, போதைப்பொருள் கடத்தல் என மொத்தம் 18 மேற்பட்ட வழக்குகள் நிலைமையில் உள்ளது என்பது தெரியவந்துள்ளது.

# மயிலாடிக்கு கல் சிற்பங்கள் செய்ய கற்கள் கொண்டுவர அனுமதிக்க வேண்டும்!

## மயிலாடி கல் சிற்பம்,கோவில் கட்டுமான தொழிலாளர் நலச் சங்கம் கோரிக்கை

கன்னியாகுமரி ஆக 2

மயிலாடி கல் சிற்பம் மற்றும் கோவில் கட்டுமான தொழிலாளர் நல சங்க தலைவர் மயிலை வேதமணி, செயலாளர் முத்துச்செல்வன், பொருளாளர் சுந்தர் ஆகியோர் மாவட்ட கலெக்டர் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆகியோருக்கு கோரிக்கை மனு அனுப்பி உள்ளனர். அதில் கூறியிருப்பதாவது.

கன்னியாகுமரி மாவட்டம் மயிலாடி பேரூராட்சியில் சிற்ப கலை தொழில் தலைமுறை தலைமுறையாக செய்து வருகிறோம். மயிலாடி சிற்பக் கலை இந்திய அரசால் புவிசார் குறியீடு பெற்றுள்ளது. இங்கு கலைநயம் மிக்க வாஸ்து முறை தவறாமல் கற்களை கொண்டு சிலைகள், கோயில் கட்டிடங்கள் செய்யும் கலை வல்லுநர்கள், பாரம்பரிய கலைஞர்கள் சிற்பிகள், ஸ்தபதிகள் உள்ளார்கள். மேலும் அண்டை மாநிலத்திற்கும் மற்றும் வெளிநாட்டிற்கும் கல்லில் செய்த ஏராளமான சிற்பங்களை அனுப்பியுள்ளோம்.

மயிலாடி சுற்றுவட்டார பகுதியில் கல் சார்ந்த சிற்ப தொழிலில் நேரடியாகவும், மறைமுகமாகவும் லட்சக்கணக்கான மக்கள் ஈடுபட்டுள்ளார்கள். மயிலாடியை பொறுத்தவரை அண்டை மாநிலமான கேரளாவையே நம்பி தொழில் செய்து வருகின்றோம்.

ஆகவே எங்களின் வாழ்வாதாரங்களை கருத்தில் கொண்டு சிற்பங்கள் செய்ய தேவையான கற்கள் கொண்டு செல்ல அனுமதி வழங்கி மயிலாடி மக்கள் மற்றும் ஏராளமான கல்சிற்ப தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை பெருக்கிட கேட்டுக் கொள்கிறோம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# தூத்துக்குடி மாநகராட்சியில் மக்கள் தொகை கணக்கெடுப்பு 2027



தூத்துக்குடி மாநகர பகுதியில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் தனித்தனியே எண்கள் கட்டிடத்தில் எழுதுதல் மற்றும் கணக்கெடுப்பு பகுதிகளுக்கான வரைபடம் தயார் செய்தல் ஆகிய பணிகள் 0182026 முதல் 038 2026 வரையிலும் அதனைத் தொடர்ந்து 0482026 முதல் 318 2026 வரையிலான காலங்களில் களப்பணியாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்கள் வாயிலாக வீடுகள் தோறும் சென்று கணக்கெடுப்பு பணிகளுக்கான முழு புள்ளி விவரங்களை சேகரிக்கும் பணியானது நடைபெற உள்ளது. இப்பணியில் களப்பணியாளர்கள் 646 நபர்களும் மேற்பார்வையாளர்களாக 97 நபர்களும் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள். இந்நிலையில், மேற்படி பணியின் ஆரம்பகட்ட நிகழ்வுகளை முதன்மை மக்கள் தொகை கணக்கு அலுவலர் மற்றும் மாநகராட்சி ஆணையர் . சி. ப்ரியங்கா நேரில் சென்று ஆய்வு செய்ததோடு மக்கள் தொகை கணக்கெடுப்பு பணியில் ஈடுபட்டுள்ள அலுவலர் மற்றும் பணியாளர்களுக்கு முழு ஒத்துழைப்பு வழங்குமாறு மாநகர பொதுமக்களை கேட்டுக் கொண்டார்



தூத்துக்குடி மாவட்டத்திற்கு வருகைத்தந்துள்ள எரிசக்தி மற்றும் சட்டத்துறை அமைச்சர் சி.டி.ஆர்.நிர்மல்குமாரை மாவட்ட ஆட்சியர் விஷு மகாஜன், நேற்று புத்தகம் வழங்கி வரவேற்றார்.உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர்ஆர். சிவ பிரசாத், மாநகராட்சி ஆணையர் எஸ். ப்ரியங்கா ஆகியோர் உள்ளனர்




கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வித் துறைசார்பாக,மாதாந்திரகல்விசெயல்பாடுகளுக்கானமீளாய்வுமற்றும்பள்ளிசெல்லா/இடைநின்ற குழந்தைகளுக்கான கணக்கெடுப்பு குறித்து முன் திட்டமிடல் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் .ச.தினேஷ் குமார் தலைமையில் நடைபெற்றது. உடன் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் . இரா.மதன்குமார், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் .செந்தில்குமார், மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.

# சென்னை வேர்மேட் கண்காட்சியை அமைச்சர் பி. மதன்ராஜா துவக்கி வைத்தார்



சென்னை, ஆகஸ்ட் 02, புதிய தொழில்நுட்பங்களை ஏற்றுக்கொள்ளும் நிறுவனங்களே நாளைய தொழில்துறை வளர்ச்சியை வழிநடத்தும்" என்று சென்னை வேர்மேட் (WAREMAT ) கண்காட்சியை துவக்கி வைத்து அமைச்சர் பி. மதன் ராஜா பேசினார்.

இந்தியாவின் கிடங்கு மேலாண்மை, மெட்டீரியல் ஹேண்ட்லிங், லாஜிஸ்டிக்ஸ், பேக்கேஜிங், தொழில்துறை தானியக்கம் மற்றும் ரோபோட்டிக்ஸ் துறைகளுக்கான "வேர்மேட், டோபேக், ஆட்டோ ரோபோ காஸ்லாக், டபிள்யூ. எஸ் ஏ.யூ.டி.எக்ஸ் 2026 என்ற மூன்று நாள் தொழில்துறை கண்காட்சியை, சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் தமிழ்நாடு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் பி. மதன் ராஜா தொடங்கி வைத்தார். நிகழ்ச்சியில் எஃப்.ஐ. சி.சி ஐ தொழில் கூட்டமைப்பின் இணைத் தலைவர் பூபேஷ் நாகராஜன், டான்ஸ்டியா தலைவர் எஸ். வாசுதேவன், சி.ஐ. தலைவர் டி. தேவகுமார், ஆந்திரா சேம்பர் ஆஃப் காமர்ஸ் துணைத் தலைவர் எஸ். நரசிம்மன், எம்.எஸ் எம்.இ இயக்குநர் தயாளன் உள்ளிட்ட தொழில்துறை முன்னோடிகள் பங்கேற்றனர்.


அமைச்சர் பி. மதன் ராஜா பேசுகையில், "தமிழ்நாட்டின் தொழில்துறை வளர்ச்சியில் எம்.எஸ் எம்.இ நிறுவனங்கள் மிக முக்கிய பங்காற்றி வருகின்றன. ஒரு தொழிற்சாலையின் வெற்றி தரமான தயாரிப்புகளை உருவாக்குவதில் மட்டுமல்ல; கிடங்கு மேலாண்மை, பொருள் கையாளுதல், பேக்கேஜிங் மற்றும் விநியோகச் சங்கிலி மேலாண்மையை நவீன தொழில் நுட்பங்களுடன் ஒருங்கிணைப்பதிலும் உள்ளது. வேர்மேட்போன்ற கண்காட்சிகள் புதிய தொழில் நுட்பங்களை நேரில் அறிந்து கொள்ளவும், வணிகத் தொடர்புகளை உருவாக்கவும், புதிய சந்தைகளை அடையவும் சிறந்த வாய்ப்பாக அமைகின்றன. இத்தகைய தொழில்நுட்பங்களை விரைவாக ஏற்றுக்கொள்ளும் நிறுவனங்களே உலகளாவிய போட்டியில் முன்னிலை பெறும். தமிழ்நாட்டின் தொழில் நிறுவனங்கள் இந்த வாய்ப்பை முழுமையாக பயன்படுத்தி அடுத்த கட்ட வளர்ச்சியை நோக்கிச் செல்ல வேண்டும்," என்றார்.

# சிறை பணியாளர்களுக்கான மன அழுத்த மேலாண்மை பயிற்சி

மதுரை

மதுரை மத்திய சிறை, பெண்கள்தனிச்சிறை மற்றும் இச்சிறைகளின் கட்டுபாட்டில் உள்ள மாவட்ட, கிளை சிறைகளில் பணிபுரியும் பணியாளர்களுக்கு மன அழுத்த மேலாண்மை பயிற்சி மதுரை சரக சிறைத்துறை துணைத்தலைவர் முனைவர் ஆ. முருகேசன் அவர்கள் முன்னிலையில் நடை பெற்றது. சிறைக் கண்காணிப்பாளர் சதீஷ் குமார் இந்நிகழ்வை ஒருக்கிணைந்து வரவேற்புரை வழங்கினர். உளவியல் நிபுணர் மற்றும் ஊக்கமுட்டும் பேச்சாளர் முனைவர் P.R. சுபாஷ் சந்திரன்அவர்கள் சிறைப் பணியாளர்களுக்கு பயிற்சி அளித்தார். அவர் எண்ணங்களே நம் வாழ்வை மேம்படுத்தும் என்ற கருத்தை மையப்படுத்தி நேர்மறை மற்றும் எதிர்மறை எண்ணக்கள் ஏற்படுத்தும் தாக்கத்தை அறிவியல் ரீதியாக விளக்கினார். நம் எதிர்பார்ப்புகள் ஈடேராமல் போகும் போது மன அழுத்தம் ஏற்படுவது இயல்பு என்றும் தேவையற்ற எண்ணங்களை கைவிடுவதே ஞானம் என்றும் கூறினார். மேலும் மன அழுத்தத்தை கையாளுவதற்கான எளிமையான சிறு சிறு உத்திகள் குறித்து பயிற்சி அளித்தார். இப்பயிற்சியில் 250 க்கும் மேற்பட்ட பணியாளர்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.





ஈரோடு மற்றும் மொடக்குறிச்சி முன்னாள் எம்.எல்.ஏ தீரன் மு. சின்னச்சாமி 47 வது நினைவு தினத்தை யொட்டி ஈரோடு தெற்கு மாவட்ட கழக செயலாளரும், முன்னாள் அமைச்சருமான சு.முத்துசாமி கழக மாநில ,மாவட்ட, மாநகர, ஒன்றிய, பேரூர் நிர்வாகிகளுடன் அவரது நினைவிடத்திற்கு சென்று அவரது நினைவிடத்தில் மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் கழக துணை பொதுச்செயலாளர் அந்தியூர் ப. செல்வராஜ், கழக நெசவாளர் அணி செயலாளர் SLT. சச்சிதானந்தம் ,கழக கொள்கை பரப்பு இணை செயலாளர் வி. சி. சந்திரகுமார், தலைமை செயற்குழு உறுப்பினர் திண்டல் குமாரசாமி,மாவட்ட கழக துணை செயலாளர் ஆ. செந்தில்குமார்,மாவட்ட கழக பொருளாளர் ப.க. பழனிச்சாமி, மாநகராட்சி துணை மேயர் வே. செல்வராஜ் , மண்டல குழு தலைவர்கள், பகுதி கழக செயலாளர் ,மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# ஜூனோ ஜெனரல் இன்சூரன்ஸ், 'இந்தியா சாலைப் பாதுகாப்பு 2026 அறிக்கை

சென்னை, ஆகஸ்ட் 02, நவீன கால டிஜிட்டல் காப்பீட்டு நிறுவனமான ஜூனோ ஜெனரல் இன்சூரன்ஸ், 'இந்தியா சாலைப் பாதுகாப்பு அறிக்கை 2026ஐ வெளியிட்டுள்ளது. இந்த அறிக்கையின் படி, ஆய்வுசெய்யப்பட்ட அனைத்து பெருநகரங்களிலும், கவனச்சிதறலற்ற ஓட்டுதலுக்கான அதிகபட்ச95மதிப்பெண்களை சென்னை பதிவு செய்துள்ளதுடன், ஒருங்கிணைந்த "ஸ்மார்ட் டிரைவ் " மதிப்பெண்ணாக 93ஐயும் பெற்றுள்ளது. 45 லட்சத்திற்கும் மேற்பட்ட பயணங்கள், 5.5 கோடி கிலோமீட்டர் ஓட்டுநர் நடத்தை மற்றும் 17 மாநிலங்களில்உள்ள"ஸ்மார்ட் டிரைவ் " செயலியின் 27 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பயனர்களின்தரவுகளின் பகுப்பாய்வின் அடிப்படையில், அடர்த்தியான நகர்ப்புற போக்குவரத்துச் சூழல்களிலும் கூட, கவனமான மற்றும் சீரான ஓட்டுநர் நடத்தை எவ்வாறு பாதுகாப்பான சாலைப் பயணங்களுக்கு அர்த்தமுள்ள வகையில் பங்களிக்க முடியும் என்பதை சென்னையின் இந்த வலுவான செயல்பாடு எடுத்துக்காட்டுகிறது என்று அந்த அறிக்கை கண்டறிந்துள்ளது.

ஸ்மார்ட்போன் அடிப்படையிலான டெலிமேட்டிக்ஸ் தொழில் நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட இந்த அறிக்கை, அதிவேகம், திடீர் பிரேக்கிங், கடுமையான முடுக்கம், வளைவுகளில் திரும்புதல் மற்றும் கவனச்சிதறலுடன் வாகனம் ஓட்டுதல் போன்ற நிஜ உலக ஓட்டுநர் நடத்தைகளை மதிப்பீடு செய்கிறது.

மக்கள் தொகை சார்ந்த பண்புகளைவிட ஓட்டுநர் பழக்க வழக்கங்களே சாலை அபாயங்களைப் பற்றி சிறந்த புரிதலை அளிக்கின்றன என்ற பரந்த கண்ணோட்டத்தை இந்த ஆய்வின் முடிவுகள் வலுப்படுத்துவதோடு, இந்தியா முழுவதும் சாலைப் பாதுகாப்பு விளைவுகளை மேம்படுத்துவதற்கு நடத்தை சார்ந்த தலையீடுகளின் அவசியத்தையும் எடுத்துக்காட்டுகின்றன.

# புதுக்கடை அருகேவீட்டில் அழுகிய நிலையில் மீனவர் உடல் கண்டெடுப்பு

## போலீசார் விசாரணை

புதுக்கடை, ஆக.2

புதுக்கடை அருகே உள்ள இனயம் புத்தன்துறை பகுதி 37 ம் அன்பியத்தை சேர்ந்தவர் ரூபன் (41). மீனவரான இவருக்கு திருமணம் ஆகி அவரது மனைவி ஏற்கனவே இறந்து விட்டார். குழந்தைகள் இல்லை. இதனால் ரூபன் தனியாக அந்த பகுதியில் வசித்து வந்தார். கடைசியாக இவரை கடந்த 24 ஆம் தேதி வீட்டின் அருகில் வசிப்பவர்கள் பார்த்துள்ளார்கள். அதன் பிறகு அவரை காணவில்லை.

இந்த நிலையில் ரூபன் வீட்டிலிருந்து துர்நாற்றம் வீசி உள்ளது. அப்போது அக்கம் பக்கத்தினர் அவரது வீட்டில் பார்த்த போது, ரூபன் வீட்டு ஹாலில் இறந்த நிலையில் உடல் அழுகி காணப்பட்டுள்ளார். இது குறித்து உடனடியாக அந்தப் பகுதியினர் ரூபனின் உறவினர் அந்தோணி என்பவருக்கு தகவல் தெரிவித்தனர். அவர் உடனடியாக புதுக்கடை போலீசாருக்கு புகார் அளித்தார். போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து அந்தோணி உடலை மீட்டு குமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் அந்தோணி எப்படி இறந்தார்? என்பது குறித்து போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# உத்திரமேரூர் வாக்குப்பதிவு இயந்திரங்கள் சரிபார்ப்பில் ஓர் இயந்திரம் பழுது

## நீதிமன்றத்தை நாட திமுக முடிவு

காஞ்சிபுரம்: கடந்த மே 4ம் தேதி வெளியான தமிழக சட்டசபை தேர்தல் முடிவுகளின் படி, உத்திரமேரூர் தொகுதியில் போட்டியிட்ட திமுக வேட்பாளர் க.சுந்தர் 70,694 வாக்குகள் பெற்ற நிலையில், அவரைவிட 14,223 வாக்குகள்அதிகம் பெற்று, 84,917 வாக்குகளுடன் தவெக வேட்பாளர் மு விரத்தினம் வெற்றி பெற்றார்.

இருப்பினும், வாக்குப்பதிவு முடிவுகள் குறித்து சந்தேகம் தெரிவித்த திமுக வேட்பாளர் க.சுந்தர், 10 குறிப்பிட்ட வாக்குச்சாவடிகளின் வாக்குப் பதிவுகளை சரி பார்க்கக் கோரி தேர்தல் ஆணையத்திடம் மனு அளித்தார்.

அதற்கான கட்டணங்களை செலுத்தியதைத் தொடர்ந்து , தேர்தல் ஆணையத்தின்உத்தரவுப்படி காஞ்சிபுரம் ஆட்சியர் சினேகா தலைமையில் , பெல் பொறியாளர்கள் உதவியுடன் வாக்குப்பதிவு இயந்திரங்கள் சரிபார்க்கும் பணி கடந்த 3 நாட்களாக நடைபெற்றது. வாக்குச்சாவடி இயந்திரங்கள்வைக்கப்பட்டிருக்கும் கிடங்கிலேயே இந்தப் பணிகள் நடைபெற்று வந்தன. வாக்குப்பதிவு சரி பார்ப்பு தொடங்கியபோது மாதிரி வாக்குகள் பதிவு செய்யப்பட்டு காட்டப்பட்டன. ஆனால் பழைய வாக்குப்பதிவின் போது விவிபேட்டில்பதிவான வாக்குகளை எண்ண வேண்டும் என்று க.சுந்தர் கோரிக்கை வைத்தார். தேர்தல் ஆணைய விதிப்படி அதை எண்ண முடியாது என்று ஆட்சியர் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து, க.சுந்தர் ஆட்சேபனை கடிதம் கொடுத்துவிட்டு, அதன் பிறகு வாக்குப்பதிவு சரிபார்ப்பு நடவடிக்கைகளில் பங்கேற்கவில்லை. இந் நிலையில், வாக்குப்பதிவு சரிபார்ப்பு நடவடிக்கைகள் நேற்று முடிவதாக இருந்தது.

கடைசியாக 314வது வாக் குச்சாவடியின் வாக்குப்பதிவு இயந்திரம் சரிபார்க்கப் படும்போது, அதை விவிபேட் உடன் இணைக்க முடியவில்லை. இதனால் பணியைத் தொடர முடியாமல் போனது. இதுகுறித்து மாவட்டஆட்சியர்சினேகா கூறுகையில், `ஆகஸ்ட் 1ம் தேதி காலை 9 மணிக்குள் பழுதான இயந்திரத்துக்குப் பதிலாக வேறு இயந்திரத்தைத் தேர்வு செய்வதா அல்லது அதே இயந்திரத்தை பொறியாளர் மூலம் சரி செய்து பார்க்க வேண்டுமா என்பதை திமுக வேட்பாளர் தெரிவிக்க வேண்டும்'' எனக் கூறினார். இது குறித்து திமுக வேட்பாளர் க .சுந்தர் கூறும்போது, ``நாங்கள் சந்தேகத்துக்குரியதாகக் குறிப்பிட்டதே 10 இயந்திரங்களைத்தான். அதில் ஒன்று பழுது எனக் கூறுவதை ஏற்க முடியாது. மேலும், நாங்கள் கேட்டபடி விவிபேட் வாக்குச்சீட்டுகள் சரி பார்க்கப்படாததால், தற்போதைய நடவடிக்கை எங்களுக்குத் திருப்தி அளிக்கவில்லை. எனவே இதனை எதிர்த்து நீதிமன்றத்தை நாட உள்ளோம்'' என்றார்.




# தருமபுரியில் பழங்குடியினரின் அனுபவ நிலங்களுக்கு வன உரிமைச் சட்டப்படி பட்டா வழங்கக் கோரி மனு கொடுக்கும் போராட்டம்

தருமபுரி ஆகஸ்ட் 02

தருமபுரியில் பழங்குடியினரின் அனுபவ நிலங்களுக்கு வன உரிமைச் சட்டத்தின் கீழ் பட்டா வழங்கக்கோரி, பழங்குடியினர் கிராமசபை கூட்டமைப்பின் சார்பில் தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மனு கொடுக்கும் போராட்டம் நடைபெற்றது. தருமபுரி மாவட்டத்தின் பென்னாகரம், பாலக்கோடு பகுதிகளில் இருளர் சமூகத்தைச் சேர்ந்த பழங்குடியினர் வசித்து வருகின்றனர். மேலும், தருமபுரி, அரூர் மற்றும் பாப்பிரெட்டிப்பட்டி வட்டங்களில் மலையாளி, குருமன்ஸ் உள்ளிட்ட பழங்குடியினர் கணிசமான அளவில் வசித்து வருகின்றனர். இவர்களில் பெரும்பாலானோர் பல ஆண்டுகளாக புறம்போக்கு நிலங்களில் விவசாயம் செய்து வருகின்றனர். தாங்கள் நீண்ட காலமாக அனுபவித்து வரும் நிலங்களுக்கு வன உரிமைச் சட்டத்தின் கீழ் பட்டா வழங்க வேண்டும் என்றும், நிலம் மற்றும் வீடு இல்லாத பழங்குடியினருக்கும் அதே சட்டத்தின் அடிப்படையில் நில உரிமை வழங்க வேண்டும் என்றும் மாவட்ட நிர்வாகத்தை அவர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர். இந்தக் கோரிக்கையை வலியுறுத்தும் வகையில், பாலக்கோடு மற்றும் பென்னாகரம் வட்டங்களில் இருந்து 850 மனுக்களும், தருமபுரி மற்றும் நல்லம்பள்ளி வட்டங்களில் இருந்து 1,000 மனுக்களும், பாப்பிரெட்டிப் பட்டி மற்றும் அரூர் வட்டங்களில் இருந்து 4,500 மனுக்களும் என மொத்தம் 6,350 மனுக்கள் தருமபுரி மாவட்ட வருவாய் அலுவலர் கவிதாவிடம் வழங்கப்பட்டன. இந்த போராட்டத்தில் தமிழ்நாடு மலைவாழ் மக்கள் சங்கத்தின் மாவட்ட செயலாளர் கே.என். மல்லையன், மாவட்டத் தலைவர் அம்புரோஸ், மாவட்ட துணைத் தலைவர்கண்ணகி, பழங்குடியினர் கிராமசபை கூட்டமைப்பின் தலைவர்கள் முத்துவேடி, நாராயணன், சின்ன முனியன், அசோக் குமார், முருகன், சண்முகம் ஆகியோர் கலந்து கொண்டு கோரிக்கைகளை வலியுறுத்தி பேசினார்கள்..

# கிருஷ்ணகிரியில் கோரிக்கை பேட்ஜ் அணிந்து பணியாற்றிய செவிலியர்கள்



கிருஷ்ணகிரி

தமிழக அரசை கண்டித்து கிருஷ்ணகிரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் செவிலியர்கள் ஜூலை 29 ஆம் தேதி கருப்பு பேட்ச் அணிந்தும், ஜூலை 30 மற்றும் 31 ஆம் தேதிகளில் கோரிக்கை பேட்ஜ் அணிந்து பணியில் ஈடுபட்டனர்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் "மறு சீரமைப்பு" என்ற பெயரில் செவிலியர் பணியிடங்களைக் குறைக்கும் நடவடிக்கையைக் கண்டித்து, கிருஷ்ணகிரி மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் செவிலியர்கள் கோரிக்கைகள் அடங்கிய பேட்ஜ் அணிந்து பணியில் ஈடுபட்டனர். தமிழ்நாடு செவிலியர் மேம்பாட்டு சங்கம் சார்பில் நடத்தப்பட்ட இந்த கவன ஈர்ப்பு போராட்டத்தில், கிருஷ்ணகிரி உள்ளிட்ட ஏழு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலிருந்து 210 செவிலியர் பணியிடங்களை வேறு மருத்துவமனைகளுக்கு மாற்றி வெளியிடப்பட்டுள்ள அரசாணை எண் 204ஐ உடனடியாக ரத்து செய்ய வேண்டும் என வலியுறுத்தப்பட்டது. மருத்துவமனைகளில் ஏற்கனவே கடுமையான செவிலியர் பற்றாக்குறை நிலவிவரும் சூழலில், பணியிடங்களை மாற்றுவது பணிச்சுமையை மேலும் அதிகரிக்கும். மேலும், ஒப்பந்த மற்றும் தற்காலிக செவிலியர்களின் பணி நிரந்தர வாய்ப்பையும் பறிக்கும் என்று செவிலியர்கள் தெரிவித்தனர்.

எனவே, ஆட்குறைப்பு அரசாணையை திரும்பப் பெற்று, நோயாளிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப புதிய நிரந்தர செவிலியர் பணியிடங்களை உருவாக்க வேண்டும் என வலியுறுத்தினர்.

# கோவையில் ஜோய் ஆலுக்காஸ் ஷோரூம் பிரமாண்ட மறுதிறப்பு விழா




கோவை ஆக:02

உலகின் முன்னணி நகை நிறுவனமான ஜோய்ஆலுக்காஸ், கோவையில் தனது புகழ்பெற்ற 100 அடி சாலையில் அமைந்துள்ள புதுப்பிக்கப்பட்ட ஷோரூமை திறந்து வைத்தது அத்துடன் 'பிரிலியன்ஸ் டயமண்ட் ஜூவல்லரி ஷோ' என்ற பிரத்யேக வைரம் மற்றும் ரத்தினக் கல் நகைகளின் கண்காட்சியையும் தொடங்கியுள்ளது.

திரைப்பட நடிகை மாளவிகா சர்மா சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு புதிய ஷோரூமையும் வைர நகை கண்காட்சியையும் திறந்து வைத்தார். இந்நிகழ்வில் பி.பி.எஸ் குழுமத் தலைவர்பி.பி.செல்வன், ரோட்டரி இன்டர்நேஷனல் முன்னாள் மாவட்ட ஆளுநர் கே.ஏ. குரியச்சன், ஜோய் ஆலுக்காஸ் நிறுவனத்தின் தலைமை செயல்பாட்டு அதிகாரி ஹென்றி ஜார்ஜ், பொது மேலாளர் பி.டி.ஜோஸ், சில்லறை விற்பனைப்பிரிவுத்தலைவர் ராஜேஷ் கிருஷ்ணன், சந்தைப்படுத்தல் பிரிவுத் தலைவர் அனிஷ் வர்கீஸ், பிராந்திய மேலாளர் சுமேஷ் கே.ஏ.உள்ளிட்ட பல முக்கியப் பிரமுகர்களும் ஏராளமான வாடிக்கையாளர்களும் கலந்துகொண்டனர்.

மணப்பெண் ஆபரணங்கள் முதல் தினசரி பயன்பாட்டு நகைகள் வரை அனைத்துத் தலைமுறையினரையும் கவரும் பாரம்பரிய மற்றும் நவீன டிசைன்கள் இங்கு இடம்பெற்றுள்ளன.

மறுதிறப்பு விழாவை முன்னிட்டு வாடிக்கையாளர்களுக்கு பல்வேறு சிறப்புச் சலுகைகள் அறிவிக்கப்பட்டுள்ளன. பழைய தங்கத்தை மாற்றி புதிய நகைகள் வாங்கும் வாடிக்கையாளர்களுக்கு ஒரு கிராமுக்கு ₹150 கூடுதலாக வழங்கப்படும். மறுதிறப்பு விழாவின் முதல் மூன்று நாட்களில் பொருட்கள் வாங்கும் ஒவ்வொரு வாடிக்கையாளருக்கும் உறுதியான பரிசு வழங்கப்படும்.

₹1 லட்சம் மற்றும் அதற்கு மேல் வைர நகைகள் வாங்குபவர்களுக்கு ஒரு தங்க நாணயம் இலவசமாக வழங்கப்படும்.

இது குறித்து ஜோய்ஆலுக்காஸ் குழுமத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் டாக்டர் ஜோய் ஆலுக்காஸ் கூறுகையில், "கோவையில் எங்களின் 100 அடி சாலை ஷோரூமை புதிய பொலிவுடன் மீண்டும் திறப்பதில் பெரு மகிழ்ச்சியடைகிறோம். இந்த மைல்கல்லைக் கொண்டாடும் வகையில், கட் மற்றும் அன்கட் வைரங்களில்புதுமையானடிசைன்களைக் கொண்ட 'பிரிலியன்ஸ் டயமண்ட் ஜூவல்லரி ஷோ'வை ஏற்பாடு செய்துள்ளோம். வாடிக்கையாளர்களுக்கு மறக்கமுடியாத,பிரீமியம் நகை ஷாப்பிங் அனுபவத்தை வழங்குவதே எங்களின் முதன்மை நோக்கம்," என்று தெரிவித்தார்.

# இரண்டு சிறுநீரகங்களும் செயலிழந்த மனைவி: வேறு பெண்களுடன் ஊர் சுற்றும் கணவன் : நடவடிக்கை எடுக்க கோரி எஸ்பியிடம் பெண்ணின் தாய் புகார் மனு



நாகர்கோவில் ஆக, 02 கன்னியாகுமரி மாவட்டம் தக்கலை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட திருவிதாங்கோடு பகுதியில் மனைவியின் சிறுநீரகம் செயல் இழந்ததை வைத்து, மருத்துவச் செலவுக்கு உதவிட வேண்டும் எனக் கூறி பல நபர்களிடம் அனுதாபத்தை ஏற்படுத்தி பணம் பெற்று, அந்த பணத்தில் பல பெண்களுடன் உல்லாசத்தில் இருந்த கணவன் மீது பாதிக்கப்பட்ட பெண்ணின் தாய் மற்றும் உறவினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் புகார் மனு அளித்தனர்.

அவர்கள் அளித்த மனுவில் கூறப்பட்டிரு ப்பதாவது :

தனது மகள் நோய் வாய்ப்பட்டு இரண்டு சிறுநீரகங்களும் செயல் இழந்து தொடர்ந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

அவளுடைய நிலைமையை நன்கு அறிந்தும் தினந்தோறும் அவளை அடித்தும் கொடுமைபடுத்தியது மட்டுமல்லாமல் வீட்டில் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைக்காக வைத்திருந்த ரூபாய் 3 லட்சத்தையும் எடுத்துக்கொண்டு ஊட்டி, கொடைக்கானல் என வேறு பெண்களுடன் உல்லாச சுற்றுலா சென்றதால் இதுகுறித்து தக்கலை காவல் நிலையத்தில் புகார் அளித்தும் போலீசார் நடவடிக்கை எடுக்காமல் உங்கள் குடும்ப பிரச்சினை நீங்களே தீர்த்துக் கொள்ளுங்கள் என பேசி காவல்துறையினர் அனுப்பி விட்டதால் நோய்வாய்ப்பட்ட மகள் என்று கூட பார்க்காமல் காவல்துறையும் நியாயம் விசாரிக்காமல் நடந்து கொண்டவிதம் வேதனை அளிப்பதால் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் காவல்துறையினர் முறையான விசாரணை மேற்கொண்டு எனது மகளுக்கு நீதி கிடைக்க ஆவண செய்வது மட்டுமல்லாமல் நோய்வாய்ப்பட்டு படுக்கையில் இருக்கும் எனது மகளை தவிக்க விட்டு விட்டு மருத்துவச் செலவுக்காக வைத்திருந்த பணத்தையும் எடுத்துச் சென்ற மகளின் கணவர் ஆசிக் அலியை கைது செய்ய வேண்டும் எனவும் மனுவில் தெரிவித்துள்ளார்.



ஈரோடு மாவட்டம் சிக்கய்ய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி மைதானத்தில் பள்ளிக் கல்வி, தமிழ்வளர்ச்சி, செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் ராஜ்மோகன், கைத்தறி, துணிநூல் மற்றும் காதித்துறை அமைச்சர் ம.விஜய் பாலாஜி ஆகியோர் 22 வது ஈரோடு புத்தகத் திருவிழாவை தொடங்கி வைத்து பார்வையிட்டார்கள்.

உடன் மாவட்ட ஆட்சியர் ச.கந்தசாமி ஈரோடு மேற்கு சட்டமன்ற உறுப்பினர் ஆனந்த் மோகன், மொடக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் சண்முகன், ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் அர்பித் ஜெயின் முதன்மை கல்வி அலுவலர் இ.மான்விழி உட்பட பலர் உள்ளனர்.

# மேகதாது அணைக்கட்டும் கர்நாடக அரசை கண்டித்து தேமுதிக மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்



தருமபுரி ஆகஸ்ட் 02 தருமபுரி மாவட்டம் ஒகேனக்கல்லில் மாவட்ட தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் சார்பில் பிலிகுண்டு பகுதியில் உள்ள காவிரி ஆறு தமிழகத்தில் நுழையும் பகுதியை பிரேமலதா விஜயகாந்த் நேரில் சென்று பார்வையிட்டார். இதைத்தொடர்ந்து மேகதாது அணை கட்டும் கர்நாடக அரசை கண்டித்து ஒகேனக்கலில் கண்டன ஆர்ப்பாட்டம் பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் தலைமையில் நடைபெற்றது. கர்நாடக அரசு மேகதாது அணை கட்டும் திட்டத்தை கைவிட வேண்டும், உச்ச நீதிமன்றம் உத்தரவின்படி தமிழகத்திற்கு தண்ணீர் திறந்து விட வேண்டும். விவசாயிகளுக்கு முழு கடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென கோஷங்கள் எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதில் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். இந்த ஆர்ப்பாட்டத்தில் தேமுதிக மாநில அவைத்தலைவர் இளங்கோவன், மாநில இளைஞரணி செயலாளர் பிரபாகரன் விஜயகாந்த், மாநிலவை உறுப்பினர் சுதீஷ், கூட்டணி கட்சி சார்பில் திமுக மேற்கு மாவட்ட செயலாளர் பி. பழனியப்பன் மற்றும் தேமுதிக திமுக மாநில, மாவட்ட நகர, ஒன்றிய நிர்வாகிகள், உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

# நாட்றம்பள்ளி ஊராட்சி ஒன்றியத்தில் வளர்ச்சித் திட்டப் பணிகளை மாவட்ட ஆட்சியர் கு.ரவிகுமார் பார்வையிட்டு ஆய்வு



திருப்பத்தூர்:ஆக:2,

திருப்பத்தூர் மாவட்டம், நாட்றம்பள்ளி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கொடையாஞ்சி ஊராட்சியில், தலைமை நீர் உந்து நிலையம், பட்டுப்பூச்சிவளர்ப்பு கூடம், மல்பெரி தோட்டம், தும்பேரி ஊராட்சியில் அண்ணாநகர் சோதனைச் சாவடி ஆகியவற்றை மாவட்ட ஆட்சியர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

திருப்பத்தூர் மாவட்டம், நாட்றம்பள்ளி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கொடையாஞ்சி ஊராட்சியில் உள்ள தலைமை நீர் உந்து நிலையத்தில் போர்வெல் மூலம் குடிநீர் சேகரிக்குப்பட்டு, பொதுமக்களுக்கு விநியோகிக்கப்படும் குடிநீரின் தரத்தினை மேற்கொண்டார். மாவட்ட ஆட்சியர் நேரில் பார்வையிட்டு ஆய்வு பின்னர், நாட்றம்பள்ளி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட தும்பேரி ஊராட்சியைச் சேர்ந்த விவசாயி பெரியசாமி (த/பெ. தங்கவேலு) அவர்களுக்கு. பட்டு வளர்ச்சித் துறையின் மூலம் ரூ.4.30 இலட்சம் மானியத்தில் 1,200 சதுர அடி பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ள பட்டுப்பூச்சி வளர்ப்பு கூடத்தையும், 2 ஏக்கர் பரப்பளவில் வளர்க்கப்பட்டு வரும் மல்பெரி தோட்டத்தையும் மாவட்ட ஆட்சியர் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு வளர்ப்பு மற்றும் பராமரிப்பு முறைகள் குறித்து விவசாயிடம் கேட்டறிந்தார். அப்பகுதியைச் சேர்ந்த விவசாயிகயிடம் சாகுபடி செய்துள்ள நெல், நிலக்கடலை, உள்ளிட்ட பயிர்களை காப்பீடு செய்து கொள்ள வேண்டுமென தெரிவித்தார். அதனைத்தொடர்ந்து, தும்பேரி ஊராட்சியில் உள்ள அண்ணாநகர் சோதனைச் சாவடியில் (செக் போஸ்ட்) மாவட்ட ஆட்சியர் நேரில் ஆய்வு மேற்கொண்டு, சோதனைச் சாவடியில் மேற்கொள்ளப்பட்டு வரும் கண்காணிப்பு பணிகள், வாகனத் தணிக்கை நடவடிக்கைகள் மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகளை பார்வையிட்டார்.

இந்த ஆய்வுகளின் போது, வேளாண்மை இணை இயக்குநர் மணி, தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் தீபா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) (பொ) அப்துல்ரஹ்மான், வாணியம்பாடி வட்டாட்சியர் சுதாகர் மற்றும் தொடர்புடைய துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.



# தவெக பொதுச்செயலாளரிடம் வாழ்த்து

தமிழக வெற்றிக் கழகத்தின் பொதுச்செயலாளரும் தமிழக ஊரக வளர்ச்சி மற்றும் நீர்வளத்துறை அமைச்சர் என். ஆனந்த் அவர்களை பாண்டிசேரியில் உள்ள அவரது இல்லத்தில் ஸ்ரீ கிருஷ்ணா பவுண்டேஷன் நிறுவனரும் குமரி கிழக்கு மாவட்ட தவெக நிர்வாகியுமான பால்ராஜ் நினைவு பரிசு வழங்கி மரியாதை நிமித்தமாக சந்தித்து வாழ்த்து பெற்றார். இந்த சந்திப்பில் மாவட்ட செயலாளர் மாதவன் மற்றும் இணை செயலாளர் பிரேம்குமார் ஆகியோர் உடனிருந்தனர்.



ஈரோடு மாவட்டம், பெருந்துறை நகராட்சி கிளை நூலகத்தில் மாவட்ட ஆட்சியர் ச.கந்தசாமி மாணவ, மாணவியர்களுடன் கலந்துரையாடினார்.

உடன் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது) தேன்மொழி உட்பட பலர் உள்ளனர்.

# குமரியில் விடிய விடிய சூறைக்காற்றுடன் கனமழை நாட்டுப் படகுகள் கடலில் கவிழ்ந்தன

நாகர்கோவில், ஆக. 2 கன்னியாகுமரி மாவட்டத்தில் கடத்த சில நாட்களாக வெயில் வாட்டி வதைத்து வந்த நிலையில் மீண்டும் சாரல் மழை பெய்ய தொடங்கியுள்ளது. ஒரு சில இடங்களில் பலத்த மழை பெய்து வருகிறது. நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் தொடங்கிய மழை நேற்று காலை வரை விடிய விடிய இடைவிடாது கொட்டித் தீர்த்தது. இதனால் மாவட்டத்தின் பல பகுதிகளில் தாழ்வான இடங்களில் மழை நீர் தேங்கியுள்ளது.


குறிப்பாக மழையுடன் பலத்த காற்று வீசியது. இதனால் மரக்கிளைகள் முறிந்து விழுந்தும், மின்கம்பங்கள் அறுந்தும் விபத்துகள் ஏற்பட்டது. நகர்ப்புறம் மற்றும் கிராமப்புற பகுதிகளில் இருளில் மூழ்கின. குறிப்பாக பல பகுதிகளில் இரவு முழுவதும் மின்தடை ஏற்பட்டு பொதுமக்கள் பாதிப்படைந்தனர். நேற்று காலையில் தான் மின் இணைப்புகள் சீரானது.

மாவட்டத்தின் மலைப் பகுதிகள் மற்றும் அணை நீர் பிடிப்பு பகுதிகளில் மழையின் தாக்கம் மிக அதிகமாக காணப்படுகிறது. இதனால் அணைகளில் நீர்வரத்து அதிகரித்துள்ளது.

குமரி மேற்கு மாவட்ட பகுதிகளில் சூறைக்காற்றுடன் கூடிய கனமழை பெய்ததால் கடலில் மீன் பிடித்துக் கொண்டு இருந்த நாட்டுப் படகுகள் கடலுக்குள் கவிழ்ந்தன.

இரையுமன் துறையை சேர்ந்த அத்தனாஸ் (56) என்பவர் சென்ற நாட்டுப் படகு கடலில் கவிழ்ந்து, வள்ளத்தைகடல்இழுத்து சென்றது. அத்தனாஸ் நீந்தி கரையேறினார். இது போன்று கடலுக்கு மீன்பிடிக்க சென்றவர்களின் பல நாட்டுப்படகுகள் கடலில் கவிழ்ந்துள்ளன. படகுகள் மட்டும் கரை ஒதுங்கின. மீன்பிடி தொழிலாளிகள் என்ன ஆனார்கள் என்று தெரியவில்லை. மீன்பிடிக்க சென்றவர்கள் குறித்த விவரங்களை பொதுமக்கள் விசாரித்து வருகின்றனர்.

இதற்கு இடையே நேற்று மீன்பிடி தடைக்காலம் முடிந்து நள்ளிரவில் விசைப்படகுகள் மீன்பிடிக்க செல்ல இருந்த நிலையில், மழையுடன் கூடிய சூறைக் காற்று வீசியதால் விசைப் படகு மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்கு செல்ல வில்லை என்பது குறிப்பிடத்தகுந்ததாகும்.



# நந்தா தொழில்நுட்ப கல்லூரியில் 15வது பட்டமளிப்பு விழா

ஈரோடு ஆக 2 அண்ணா பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்று, தன்னாட்சி அந்தஸ்துடன் செயல்பட்டு வரும் நந்தா தொழில்நுட்பக் கல்லூரியின் 15வது பட்டமளிப்பு விழா

ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் தலைவர் சண்முகன் தலைமையில் நடந்தது. அப்போது விருந்தினராக கலந்து கொண்ட சென்னை மல்டிகோர் வேர் நிறுவனத்தின் முதன்மை மனிதவள அலுவலர் சசிகாந்த் ஜெயராமனை அவர் வரவேற்று பட்டதாரிகளுக்கு அறிமுகம் செய்து வைத்தார். மேலும், 120க்கும் மேற்பட்ட முன்னணி நிறுவனங்கள் வருகை புரிந்து மாணவர்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்கியுள்ளன எனவும் பல மாணவர்கள் ஒரே நிறுவனத்தில் பல்வேறு வேலைவாய்ப்புகளை பெற்று கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளனர் எனவும் கூறி அவர் மாணவர்களை பாராட்டினார். இங்கு பட்டம் பெற வருகைப்புரிந்துள்ள மாணவர்களும், அவர்தம் பெற்றோர்களும் தங்களது வாழ்க்கையில் ஆரோக்கியத்துடன் வாழ வேண்டும்என்றுவாழ்த்தி பேசினார்.

நந்தா தொழில்நுட்ப கல்லூரியின் முதல்வர் நந்தகோபால் நடப்புக் கல்வியாண்டில் அனைத்து துறைகளிலும் அடைந்த முன்னேற்றங்களையும், அதற்கு உறுதுணையாக செயல்புரிந்த துறைத் தலைவர்கள், பேராசிரியர்கள், உதவி பேராசிரியர்கள் மற்றும் மாணவர்களின் பங்குகள் கொண்ட ஆண்டறிக்கையினை வாசித்தார். இதனை தொடர்ந்து, சிறப்பு விருந்தினர் மல்டிகோர் வேர் நிறுவனத்தின் முதன்மை மனிதவள அலுவலர் சசிகாந்த் ஜெயராமன் தரவரிசையில் இடம் பெற்ற 12 மாணவர்கள் உட்பட இளங்கலை பொறியியல் துறைகள் மற்றும் முதுகலை பொறியியல் துறைகளைச் சார்ந்த 235 மாணவர்களுக்கு பட்டங்களை வழங்கி பேசினார். நந்தா கல்வி அறக்கட்டளையின் அங்கத்தினர் பானுமதி சண்முகன், இணை நிர்வாக அறங்காவலர்கள் எஸ். நந்தகுமார் பிரதீப், எஸ். திருமூர்த்தி, மற்றும் தொழில்நுட்ப வளாகத்தின் நிர்வாக அலுவலர் வேலுசாமி ஆகியோர் முன்னிலை வகித்தார்கள்.

# எண்ணெய் குழாய் திட்டத்திற்கு எதிர்ப்பு: 4 பெண் விவசாயிகள் தற்கொலை முயற்சி

## வேலம்பட்டியில் பரபரப்பு




திருப்பூர் ஆக.02 பாரத் பெட்ரோலியம் நிறுவனம் IDPL சார்பில் கோவை மாவட்டம் இருகூர் முதல் கர்நாடக மாநிலம் தேவனகுந்தி வரையில் 340 கிலோமீட்டர் தொலைவிற்கு எண்ணெய் குழாய் அமைக்கும் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது இதில் திருப்பூர் மாவட்டம் முத்தூரிலிருந்து கர்நாடக மாநிலம் தேவனஹந்தி வரை நெடுஞ்சாலை வழியாக குழாய் பதிக்கப்படுகிறது

ஆனால் இருதூரிலிருந்து முத்தூர் வரையிலான 70 கிலோ மீட்டர் தூரம் மட்டும் விவசாய விளைநிலங்கள் வழியாக பணிகள் தொடங்கப்பட்டுள்ளது, விவசாயிகளின் கடும் எதிர்ப்பையும் மீறி காவல் துறை பாதுகாப்புடன் பணிகள் நடப்பதால் திருப்பூர் மாவட்டம் பல்லடம் அருகே வேலம் பட்டி டோல்கேட் பகுதியில் விவசாயிகள்

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து விளைநிலங்களில் குழாய் பதிக்க அனுமதிக்க மாட்டோம் என்றும் நெடுஞ்சாலை வழியாக குழாய்களை பதிக்க வேண்டும் என வலியுறுத்தி பாதிக்கப்படும் விவசாயிகள் திருப்பூர் தாராபுரம் பிரதான சாலையில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர், அதனைத் தொடர்ந்து நூற்றுக்கும் மேற்பட்ட விவசாயிகள் தமிழக அரசின் உடைய நடவடிக்கையை கண்டித்து கோஷங்களை எழுப்பினர் திடீரென நான்கு பெண் விவசாயிகள் உடலில் மன்னனை ஊற்றிக் கொண்டு தற்கொலைக்கு முயன்றனர்

அப்போது அங்கு பாதுகாப்புக்கு நின்றிருந்த போலீசார் அவர்களை தடுத்தனர் மண்ணெண்ணெய் ஊற்றி கொண்டவர்கள் மீது தண்ணீரை ஊற்ற முயன்ற போது உங்களது உதவி எங்களுக்கு வேண்டாம் என்றும் ஆவேசம் அடைந்தனர். இதனால் விவசாயிகளுக்கும் போலீசா இருக்கும் இடையே தள்ளுமுள்ளு கடும்வாக்குவாதமும் ஏற்பட்டது அதனைத் தொடர்ந்து மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட அனைவரையும் போலீசார்கைது செய்தனர். போலீசாரின் இத்தகைய அடக்கு முறையை கண்டிப்பதாகவும் கோஷங்களை எழுப்பி விவசாயிகள் கடும் கண்டனத்தை பதிவு செய்தனர், இது குறித்து பாதிக்கப்பட்ட விவசாயிகள் கூறுகையில் தமிழக முதல்வர் உடனடியாக தலையிட்டு விவசாயிகளை அழைத்து விலை நிலங்கள் வழியாக என்னை குழாய்களை அமைக்காமல் மாற்றுப் பாதை குறித்து பேச வேண்டும் இந்த திட்டத்தை நிறுத்த வேண்டும் போலீசாரின்உதவியோடு அளவீடு பணிகளை செய்ய முற்பட்டால் தடுத்து நிறுத்துவோம் ,இந்தத் திட்டத்தை நெடுஞ்சாலை வழியாக கொண்டு செல்ல வேண்டும் என தங்களது போராட்டம் தொடரும் என்றும் மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட விவசாயிகள் தெரிவித்தனர்,

திருப்பூர் அருகே வேலம்பட்டிடோல்கேட் பகுதியில் விவசாயிகள் idpl என்னை குழாய் பதிப்பிற்கு எதிர்ப்பு தெரிவித்து மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட விவசாயிகள் திடீரென நான்கு பேர் அடுத்தடுத்து உடலில் மன்னனை ஊற்றிக் கொண்டு தற்கொலைக்கு முயன்றதால் பெரும் பரபரப்பு காணப்படுகிறது.

# மக்கள்தொகை கணக்கெடுப்பு 2027ன் ஒரு பகுதியாக வீடுவீடாக கணக்கெடுக்கும் பணி

## மாவட்ட ஆட்சித்தலைவர் ச.தினேஷ்குமார் துவக்கி வைத்தார்



கிருஷ்ணகிரி ஆகஸ்ட் 2:

கிருஷ்ணகிரி நகராட்சி, ஜக்கப்பன் நகர், 18 வார்டு, முதல் குறுக்கு தெரு பகுதியில் மக்கள் தொகை கணக்கெடுப்பு 2027 வீடுவீடாக கணக்கெடுக்கும் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.தினேஷ்குமார் நேற்று துவக்கி வைத்து பார்வையிட்டார். அப்போது மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்ததாவது : கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மக்கள் தொகை கணக்கெடுப்பு 2027ன் ஒரு பகுதியாக வீடுவீடாக கணக்கெடுக்கும் (House Listing Operations) பணி துவக்கப்பட்டுள்ளது. இப்பணி 01.08.2026 முதல் 30.08.2026 வரை மாவட்டம் முழுவதும் நடைபெற உள்ளது. இப்பணிக்காக மாவட்டம் முழுவதும் 2,660 கணக்கெடுப்பாளர்கள் (Enumerators) மற்றும் 418 மேற்பார்வையாளர்கள் (Supervisors) நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் ஒவ்வொரு வீட்டிற்கும் நேரில் சென்று கணக்கெடுப்புப் பணிகளை மேற்கொள்வார்கள் கணக்கெடுப்புப் பணியில் ஈடுபடும் அனைத்து கணக்கெடுப்பாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்களும் அரசு வழங்கிய அடையாள அட்டையுடன் வருகை தருவார்கள். பொதுமக்கள் தங்களின் அடையாள அட்டையை உறுதிப்படுத்திக் கொண்டு, தேவையான விவரங்களை வழங்கி முழு ஒத்துழைப்பு அளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். கணக்கெடுப்பின்போது பெறப்படும் தகவல்கள் அனைத்தும் ரகசியமாக பாதுகாக்கப்பட்டு, கணக்கெடுப்பு தொடர்பான அதிகாரப்பூர்வ புள்ளிவிவர நோக்கங்களுக்காக மட்டுமே பயன்படுத்தப்படும். எனவே, கிருஷ்ணகிரி மாவட்டத்தைச் சேர்ந்த அனைத்து பொதுமக்களும் கணக்கெடுப்பாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்களுக்கு முழு ஒத்துழைப்பு வழங்கி, மக்கள்தொகை கணக்கெடுப்புப் பணியை வெற்றிகரமாக நடத்த உதவுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.தினேஷ்குமார் தெரிவித்தார். இவ்வாய்வின் போது வருவாய் கோட்டாட்சியர் ஷாஜகான், மாவட்ட புள்ளியியல் அலுவலர் குப்புசாமி, கிருஷ்ணகிரி நகராட்சி ஆணையர் சேகர், தனி வட்டாட்சியர் வெங்கடேசன், கிருஷ்ணகிரி வட்டாட்சியர் ராஜலட்சுமி, நகரமைப்பு அலுவலர் மலர்விழி மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடன் இருந்தனர்.

# மார்த்தாண்டம் அருகே இளம் பெண்ணுக்கு வரதட்சணை கொடுமை; கணவர் உட்பட 4 பேர் மீது வழக்கு

மார்த்தாண்டம், ஆக.2

மார்த்தாண்டம் அருகே உள்ளபாகோடு பகுதியை சேர்ந்தவர் சுந்தரேசன் மகள் சௌபர்ணிகா (23). இவருக்கும் பொருந்தாற விளை பகுதியை சேர்ந்த கனகராஜ் மகன் விஜய் என்பவருக்கும் கடந்த 2022 ஆம் ஆண்டு திருமண நடந்துள்ளது. அப்போது வரதட்சணையாக சௌபர்ணிகா வீட்டில் இருந்து 142 பவுன் தங்க நகைகள் மற்றும் 15 லட்சம் ரூபாய் ரொக்க பணம் கொடுத்துள்ளனர்.

பின்னர் ஒரு வாரம் சௌபர்ணிகா மற்றும் விஜய் சேர்ந்து வாழ்ந்துள்ளனர். அதற்குப்பின் வரதட்சணையாக கொடுத்த நகையிலிருந்து 125 பவுன் தங்க நகைகளை விற்று வட்டி தொழில் செய்யலாம் என விஜயின் தாயார் வசந்தகுமாரி (60) மற்றும் அவரது சகோதரி விஜிலா (29) ஆகியோர் சௌபர்ணிகாவிடம் நகையை கேட்டுள்ளனர். சௌபர்னிகா தர மறுத்து தனது பெற்றோரிடம் கேட்க வேண்டும் என கூறியுள்ளார்.

இதனால் ஆத்திரம் அடைந்த விஜயின் தாய் மற்றும் சகோதரி சௌபர்ணிகாவை துன்புறுத்தி வந்துள்ளனர். மேலும் சௌபர்ணிகாவின் பெற்றோரின் சொத்திலிருந்துமூன்றில்ஒருபங்கை விஜய்க்கு எழுதி தர வேண்டும் இல்லையென்றால் அந்த பங்குக்குரிய பணத்தை வங்கி கணக்கில் செலுத்த வேண்டும் என நிபந்தனை விதித்துள்ளனர்.

இதனால் மனமுடைந்த சௌபர்ணிகா கடந்த 2023 ஆம் ஆண்டு கணவரை விட்டு பிரிந்து அவரது பெற்றோர் வீட்டிற்கு சென்று விட்டார். பின்னர் இது குறித்து குழித்துறை நீதிமன்றத்தில் அதிக வரதட்சனை கேட்டு துன்புறுத்துவதாக புகார் அளித்தார். புகாரின் பேரில் கணவர் மற்றும் குடும்பத்தினர் மீது வழக்கு பதிவு செய்ய நீதிமன்றம் உத்தரவிட்டது.

நீதிமன்ற உத்தரவின் பேரில் கணவர் விஜய் அவரது தாய் வசந்தகுமாரி, சகோதரி விஜிலா மற்றும் தந்தை கனகராஜ் ஆகிய நான்கு பேர் மீது மார்த்தாண்டம் மகளிர் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

# திமுகவினரே எதிராக செயல்பட்டனர்: முன்னாள் அமைச்சர் தோப்பு வெங்கடாசலம் பரபரப்பு பேட்டி

ஈரோடு ஆகஸ்ட் 02

ஈரோடு மாவட்டம் பெருந்துறையில் செய்தியாளர்களைச் சந்தித்த முன்னாள் அமைச்சரும், திமுக மத்திய மாவட்டச் செயலாளர் பொறுப்பில் இருந்து விடுவிக்கப்பட்டவருமான தோப்பு வெங்கடாசலம், நடந்து முடிந்த தேர்தலில் திமுகவினரே எனக்கு எதிராக வேலை செய்தனர் எனத் குற்றம்சாட்டினார்.

சுழற்சி முறையில் சுற்றுச்சூழல் துறை அமைச்சராகவும், சட்டமன்ற உறுப்பினராகவும் பணியாற்றி ஊராட்சிக் கோட்டை கூட்டுக்குடிநீர் திட்டத்திற்கு அடித்தளமிட்டதைசுட்டிக்காட்டிய அவர், அதிமுகவில் இருந்தபோதும், பின்னர் திமுகவில் இணைந்தபோதும் கட்சியின் வளர்ச்சிக்கும் நாடாளுமன்ற தேர்தல் வெற்றிக்கும் அரும்பாடு பட்டதாகத் தெரிவித்தார்.

ஆனால், அத்திக்கடவு அவினாசி திட்டத்தில் நீர் தராதது மற்றும் சிப்காட் போராட்ட வழக்குகள் போன்ற காரணங்களால் மக்களுக்கு ஏற்பட்ட அதிருப்தியினாலும், கட்சிக்குள்ளேயே சிலர் தனக்கு எதிராகச் செயல்பட்டதாலும் பெருந்துறை தொகுதியில் தோல்வி ஏற்பட்டதாகக் கூறினார்.

உள்கட்சியினரின் இத்தகைய செயல்பாடுகள் குறித்து தலைமைக்குக் கடிதம் எழுதியும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும், பொறுப்பில் இருந்தும் பியூன் கூட தன் பேச்சைக்



கேட்காத நிலையே இருந்ததாகவும் ஆதங்கப்பட்டார். மாற்றுக்கட்சிக்குச் செல்லும் எண்ணம் தற்போது இல்லை எனத் தெளிவுபடுத்திய அவர், திமுகவில் தொடர்ந்து நீடிப்பது குறித்து தொண்டர்களுடன் கலந்துபேசி இன்னும் ஒரு வாரத்தில் தனது முடிவை அறிவிக்கப்போவதாகத் தெரிவித்தார்.

# தஞ்சாவூரில் த.வெ.க. அரசை கண்டித்து ஆகஸ்ட் 3 தேதி, தி.மு.க வினர் ஆர்ப்பாட்டம்



தஞ்சாவூர், ஆக. 2: விவசாய கடன் தள்ளுபடி, டெல்டா மாவட்டங்களைவறட்சி பாதித்த பகுதிகளாக அறிவித்தல் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி, திமுக சார்பில் தஞ்சாவூரில் நடைபெறும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்கள் திரளாக பங்கேற்க வேண்டும் என முடிவு செய்யப்பட்டுள்ளது.

தஞ்சாவூர் பனகல் கட்டிடம் முன்பு ஆகஸ்ட் 3 ஆம் தேதி காலை 10 மணிக்கு நடைபெறும் இந்த ஆர்ப்பாட்டத்திற்கு சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவரும், திமுக இளைஞரணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் தலைமை வகிக்கிறார். இதில் கூட்டணி கட்சி நிர்வாகிகளும் கலந்து கொண்டு ஆதரவு தெரிவிக்க உள்ளனர்.

இதுகுறித்து தஞ்சாவூர் மத்திய மாவட்ட திமுக அவசர செயற்குழு கூட்டம், கலைஞர் அறிவாலயத்தில் நடைபெற்றது. மாவட்ட அவைத்தலைவர் இறைவன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் எஸ்.எஸ். பழனிமாணிக்கம், முன்னாள் அமைச்சர் மற்றும் ஒரத்தநாடு தொகுதி எம்எல்ஏ வைத்திலிங்கம் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட செயலாளர் துரை. சந்திரசேகரன் எம்எல்ஏ வரவேற்றார்.

கூட்டத்தில், விவசாய கடன்களை முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டும், மேகதாது அணை கட்டும் முயற்சியை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும், காவிரி டெல்டா மாவட்டங்களை வறட்சி மாவட்டங்களாக அறிவித்து நிவாரணம் வழங்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி நடைபெறும் ஆர்ப்பாட்டத்தை சிறப்பாக நடத்துவது குறித்து ஆலோசிக்கப்பட்டது.

மேலும், மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு ஒன்றியம், நகரம், மாநகரம் மற்றும் பேரூராட்சிகளில் இருந்து விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள், கட்சி நிர்வாகிகள் அதிகளவில் பங்கேற்க வேண்டும் என முடிவு செய்யப்பட்டது.

ஒன்றிய செயலாளர்கள், பேரூராட்சி நிர்வாகிகள், விவசாயத் தொழிலாளர் அணிமற்றும்விவசாயிகள் சங்க நிர்வாகிகள், மாணவரணி நிர்வாகிகள் உள்ளிட்ட அனைத்து தரப்பினரும்ஆர்ப்பாட்டத்துக்கு முழுஒத்துழைப்புவழங்க வேண்டும் என கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

கூட்டத்தில் மாநகர செயலாளர் சண். ராமநாதன், தஞ்சாவூர் மாநகராட்சி மேயர் (பொறுப்பு) டாக்டர் அஞ்சுகம் பூபதி, மாவட்ட நிர்வாகிகள் மற்றும் பல்வேறு அணிகளைச் சேர்ந்த நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரையில் மாநில செயற்குழு முடிவின்படி தமிழ்நாடு அரசு ஓய்வூதியர் மருத்துவ காப்பீடு திட்ட அரசாணை என் 1 2 3 திருத்தம் செய்யக்கோரி ஆர்ப்பாட்டம் தலைவர் சிவலிங்கம் தலைமையில் ஊத்தங்கரை வட்டார வளர்ச்சி அலுவலகம் முன்பு நடைபெற்றது



# டெல்டாவை வறட்சிப்பகுதியாக அறிவிக்க கோரி குறைதீர்க்கும் கூட்டத்தில் விவசாயிகள் வெளிநடப்பு

தஞ்சாவூர் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டத்தில், டெல்டா மாவட்டங்களை வறட்சி பாதித்த பகுதிகளாக அறிவிக்கவும், பயிர் கடன்களை தள்ளுபடி செய்யவும் வலியுறுத்தி விவசாயிகள் வெளிநடப்பு செய்தனர்.

மாவட்ட கலெக்டர் ரேவதி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், மேகதாது அணை விவகாரம், காவிரி நீர் பிரச்சினை, வறட்சி நிவாரணம், பயிர் இழப்பீடு, கரும்புக்கு டன் ஒன்றுக்கு ரூ.4,500 வழங்குதல், பயிர் கடன் உயர்வு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை விவசாயிகள் முன்வைத்தனர்.

மேலும், ஏரிகள் மற்றும் வாய்க்கால்களை தூர்வார நடவடிக்கை எடுக்க வேண்டும், நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் ஏக்கருக்கு 70 மூட்டைகள் வரை நெல் கொள்முதல் செய்ய வேண்டும் என்றும் வலியுறுத்தினர்.

இதையடுத்து, பயிர் கடன்தள்ளுபடி, டெல்டா மாவட்டங்களை வறட்சி பாதித்த பகுதிகளாக அறிவித்தல்உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி விவசாயிகள் முழக்கமிட்டு வெளிநடப்பு செய்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். பின்னர் சுமார் 15 நிமிடங்களுக்குப் பிறகு மீண்டும் கூட்டத்தில் பங்கேற்றனர்.

கூட்டத்தில், பருவமழைக்கு முன் 100 நாட்களுக்குள் ஏ, பி, சி, டி பிரிவு வாய்க்கால்கள் தூர்வாரப்படும் என்றும், நீர்மேலாண்மை பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்றும் கலெக்டர் ரேவதி தெரிவித்தார்.

# நெல்லை, குமரியில் கொட்டிய கனமழை ஆக.7 வரை மழை பெய்ய வாய்ப்பு

சென்னை: தமிழகத்தில் ஓரிருஇடங்களில்ஆகஸ்ட் 7ம் தேதி வரை லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது. திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களில் கனமழை பெய்துள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: தமிழக கடலோரப் பகுதிகளில் கீழ்மட்ட வளிமண்டலத்தில் ஒரு பலவீனமான காற்றழுத்த தாழ்வுப் பாதை நிலவுகிறது. இதன் காரணமாக , நாளை (ஆக.2, 3) மேற்குத் தொடர்ச்சி மலை மாவட்டங்களிலும், வட கடலோர தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும் இடி, மின்னல், பலத்த காற்றுடன் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

மேற்குத் தொடர்ச்சி மலை மாவட்டங்கள், வட கடலோர தமிழகம் மற்றும் இதர பகுதிகளில் 7ம் தேதி வரைமிதமானமழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

வட தமிழகம், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் ஒருசில இடங்களில் நாளையும், நாளை மறுதினமும் அதிகபட்ச வெப்பநிலை வழக்கத்தைவிட 5 டிகிரி ஃபாரன்ஹீட் வரை அதிகரிக்கக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். மாலை, இரவு நேரங்களில் இடி, மின்னலுடன் லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது. வெப்பநிலை 82 டிகிரி முதல் 100 டிகிரி ஃபாரன்ஹீட் வரை இருக்கக்கூடும்.

இன்று காலை 8.30 மணி வரையிலான 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக திருநெல்வேலி மாவட்டம் நாலுமுக்கில் 29 செ.மீ., ஊத்தில் 27 செ.மீ., காக்காச்சியில் 19 செ.மீ., கன்னியாகுமரி மாவட்டம் காளிகேசத்தில் 14 செ.மீ., சிற்றாறு, கீரிப்பாறையில் 13 செ.மீ. மழை பதிவாகியுள்ளது.



# 30 ஆண்டுகளுக்கு பின் நடைபெற்ற முன்னாள் மாணவர்களின் சந்திப்பு

நாகர்கோவில் ஆக 02

கன்னியாகுமரிமாவட்டம்நாகர்கோவில்குட்செப்பேடு மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளியில் 19831996 ஆம் ஆண்டில் படித்த முன்னாள் மாணவர்கள் 30 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் குடும்பத்துடன் நாகர்கோவிலில் இணைந்தனர். இங்கிலாந்து, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஓமன், சவுதி உள்ளிட்ட 20 க்கும் மேற்பட்ட வெளிநாடுகளிலிருந்தும், சென்னை, தூத்துக்குடி போன்ற பல்வேறு நகரங்களிலிருந்தும் முன்னாள் மாணவர்கள் சிறப்பு விடுப்பு எடுத்துக்கொண்டு குடும்பத்தினருடன் பங்கேற்றனர்.

மருத்துவம், பொறியியல், அறிவியல் ஆராய்ச்சி கல்வி மற்றும் பேராசிரியப் பணி எனப் பல்வேறு உயர் பொறுப்புகளில் உள்ளனர். தங்களது இந்த வளர்ச்சிக்கு ஆசிரியர்களும் பள்ளி நிர்வாகமுமே காரணம் என நன்றியுடன் நினைவு கூர்ந்தனர்.

வாட்ஸ்அப் குழு அமைத்து பேசத் தொடங்கிய உடனே அனைவரும் மிகுந்த உற்சாகமடைந்தோம். 30 ஆண்டுகளுக்குப் பிறகு நண்பர்களைச் சந்திக்கும் வாய்ப்பை யாருமே தவறவிட விரும்பவில்லை. ஒன்றரை மாத தீவிரத் திட்டமிடலுக்குப் பிறகு வெளிநாடுகளிலிருந்தும் நண்பர்கள் திரண்டு வந்தது மிகுந்த மகிழ்ச்சியளிக்கிறது என அவர்கள் தெரிவித்தனர்.

பள்ளி தொடங்கிய முதல் பேட்ச் மாணவர்கள் முதல் அனைவரும் தங்களது குடும்பத்தினர் மற்றும் குழந்தைகளுடன்பங்கேற்றுள்ளது இந்தமறுசந்திப்பை மேலும் சிறப்பித்துள்ளது.

# தேசிய நெடுஞ்சாலையில் கன்னியாகுமரி முதல் காணிமடம் வரை ஆக்கிரமிப்பு அகற்றும் பணி தொடக்கம்



கன்னியாகுமரி, ஆக.1

உச்சநீதிமன்ற உத்தரவின் படி தேசிய நெடுஞ்சாலைகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றும் நடவடிக்கை நேற்று கன்னியாகுமரியில் தொடங்கியது.

தேசிய நெடுஞ்சாலைகளில் பொதுமக்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு, சாலை ஓரங்களில் எந்தவித ஆக்கிரமிப்பும் அனுமதிக்கப்படக் கூடாது என உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இதன் அடிப்படையில், தேசிய நெடுஞ்சாலைத் துறைக்கு சொந்தமான இடங்களில் ஆக்கிரமித்து கடைகள் மற்றும் கட்டிடங்கள் அமைத்திருந்தவர்களுக்கு ஒரு மாதத்திற்கு முன்பே நோட்டீஸ் வழங்கப்பட்டிருந்தது.

அதனைத் தொடர்ந்து நேற்று கன்னியாகுமரி அருகே முருகன்குன்றம் பகுதியில் இருந்து ஆக்கிரமிப்பு அகற்றும் பணி தொடங்கப்பட்டது. சாலை ஓரங்களில் ஆக்கிரமித்து கட்டப்பட்டிருந்த கடைகள் மற்றும் கட்டிடங்களை தேசிய நெடுஞ்சாலைத் துறையினர் பொக்லைன் இயந்திரங்கள் மூலம் அகற்றினர்.

கன்னியாகுமரியில் இருந்து காணிமடம் வரைசுமார் 10 கிலோமீட்டர்தூரத்தில்உள்ளதேசிய நெடுஞ்சாலை இருபுறங்களிலும் அமைந்துள்ள ஆக்கிரமிப்புகள் கட்டம் கட்டமாக அகற்றப்பட்டு வருகின்றன

இதற்கு முன்பாக தேசிய நெடுஞ்சாலைத் துறையினர் தங்களுக்குச் சொந்தமான இடங்களை சர்வே செய்து எல்கைக் கற்கள் மற்றும் அடையாளக் கம்பங்களை நட்டு, ஆக்கிரமிப்பாளர்களுக்கு முன் அறிவிப்பு வழங்கியிருந்தனர் இந்த நடவடிக்கையில் தேசிய நெடுஞ்சாலைத் துறையின் திட்ட இயக்குநர் சச்சின் குமார் தலைமையில் அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் பங்கேற்றனர். மேலும் காவல்துறையினர் மற்றும் மாவட்ட நிர்வாக அதிகாரிகள் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர். அகஸ்தீஸ்வரம் வருவாய் ஆய்வாளர் சுஜி முன்னிலையில் ஆக்கிரமிப்பு அகற்றும் பணி நடைபெற்றது. தேசிய நெடுஞ்சாலைகளை பாதுகாப்பாகவும், போக்குவரத்துக்கு இடையூறு இல்லாத வகையிலும் பராமரிக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

# தஞ்சாவூர் மாவட்டத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்



தஞ்சாவூர் ஆகஸ்ட் 2

தஞ்சாவூர் மாவட்டத்தில் விவசாயிகள்குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடந்தது . அதில் நடப்பு பருவத்தில் இதுவரை இரண்டரை லட்சம் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள் ளது என கலெக்டர் ரேவதி தெரிவித்தார் விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டத்திற்கு கலெக்டர்ரேவதிதலைமை தாங்கி பேசியதாவது

தஞ்சாவூர் மாவட்டத்தில் நடப்பு குறுவை பருவத்தில்1 லட்சத்து 40 ஆயிரத்து592ஏக்கர்பரப்பளவில் நெல்சாகுபடி நடைபெற்று உள்ளது யூரியா, டிஏபி, காம்ப்ளக்ஸ் உரங்கள்தொடக்கவேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் மற்றும் தனியார் உரக் கடைகளில் போதுமான அளவு இருப்பு வைக்கப்பட்டு வினியோகம் செய்யப்பட்டு வருகிறது

தஞ்சாவூர் மாவட்டத்தில் சேமா பொது காப்பீட்டு நிறுவனம், அக்ரிகல்சுரல் இன்சூரன்ஸ் கம்பெனி மூலம் பயிர் காப்பீடு திட்டம் செயல்படுத்தப்படுகிறது இதுவரை விவசாயஅடையாள எண் பதிவு செய்யாதவர்கள் தங்களுடைய நிலத்தின் கணினி, சிட்டா ,ஆதார் அட்டை ,ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட்ட செல்போன் எண் ஆகியவற்றுடன் அருகில் உள்ள பொது இசேவை மையம் அல்லது அந்தந்த வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலகங்களை தொடர்பு கொண்டு பதிவு செய்யலாம்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் நடப்பு ஆண்டில் குறுவை சிறப்பு தொகுப்பு திட்டத்திற்காக ரூபாய் 24 கோடியே 24 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு ள்ளது .2025 26 ஆம் ஆண்டுக்கு ரூபாய் 595 கோடி நிர்ணயிக்கப் பட்டு ,தஞ்சாவூர் மற்றும் கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கிகள் மூலம் கடந்த ஏப்ரல் மாதம் 1ஆம் தேதி முதல் கடந்த 28 ஆம் தேதி வரை ரூபாய் 372 கோடி வழங்கப்பட்டுள்ளது

தஞ்சாவூர் மண்டலத்தில் அனைத்து தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களிலும் நடப்பு சாகுபடி பருவத்திற்கு 3,305 டன் உரங்கள் தற்போது இருப்பில் உள்ளது. நடப்பு பருவத்தில் கடந்த மே மாதம் 18ஆம் தேதி முதல் கடந்த 28ஆம் தேதி வரை 343 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்க ப்பட்டு 2 லட்சத்து 47 ஆயிரத்து 684 டன் நெல் கொள்முதல் செய்யப்பட் டுள்ளது .இது வரை 42 ஆயிரத்து 872 விவசாயிகள்கடன்அடைந்துள் ளனர் .விற்பனை செய்யப்படும் நெல்லிற்கு உண்டான தொகை யாக விவசாயிகளுக்கு ரூபாய் 621 கோடி மின்னணு வங்கி பண பரிவர்த்தனை மூலம் வழங்கப் பட்டுள்ளது .

இவ்வாறு அவர் பேசினார்

கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் இளங்கோவன், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக முதல்நிலை மண்டல மேலாளர் செல்வம் ,வேளாண்மை இணை இயக்குநர் லட்சுமி காந்தன் மற்றும் அலுவலர்கள் விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர்



தூத்துக்குடியில் தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம், மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் சார்பில் மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் பணியாளர் குடியிருப்பு வளாகத்தில் ரூ.3 கோடி மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்டுள்ள மாணவியர் விடுதி கூடுதல் கட்டடத்தினை மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை அமைச்சர் ஆ.ஶ்ரீநாத் திறந்து வைத்தார். உடன் அரசு செயலர், கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை அனு ஜார்ஜ், மாவட்ட வருவாய் அலுவலர் .மூ.குருச்சந்திரன் மற்றும் துறை சார்ந்த அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டார்கள்

# 140 ஆண்டு பழமையான ஊட்டி 'அசெம்ப்ளி ரூம்ஸ்' வளாகத்தை தனியார்மயமாக்க எதிர்ப்பு

ஊட்டியில் 140 ஆண்டுகள் பழமை வாய்ந்த அசெம்ப்ளி ரூம்ஸ் திரையரங்க வளாகத்தை தனியார்மயமாக்கும் முயற்சிக்கு சமூக ஆர்வலர்கள் மற்றும் பாரம்பரிய பாதுகாப்பு அமைப்புகள் எதிர்ப்பு தெரிவித்துள்ளன.

மாவட்ட ஆட்சியர் தலைமையிலான அறங்காவலர்கள் இந்த நடவடிக்கையை முன்னெடுத்து வருவதாக தகவல் வெளியாகியுள்ளது. இதனால் பாரம்பரிய கட்டிடத்தின் எதிர்காலம் குறித்து கவலை எழுந்துள்ளது.

நீலகிரி ஆவணக் காப்பக இயக்குநர் டி. வேணுகோபால், 140 ஆண்டுகள் பழமையான இந்த கட்டிடம் தமிழ்நாடு பாரம்பரிய ஆணையச் சட்டத்தின் பாதுகாப்பில் உள்ளதாகவும், அதன் பயன்பாட்டில் மாற்றம் செய்ய முன் சட்ட ரீதியான பரிசீலனை அவசியம் என்றும் தெரிவித்தார்.

பொதுமக்களின் நிதியில் உருவான இந்த அறக்கட்டளையை தனியார் வணிக நிறுவனமாக மாற்றக் கூடாது என்றும், 1931 முதல் சமூக மற்றும் கலாசார வளர்ச்சிக்கு பங்களித்து வரும் இந்த பாரம்பரியச் சின்னத்தை பாதுகாக்க வேண்டும் என்றும் சமூக ஆர்வலர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16 C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.